## இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முறைப்பாடு தொடர்பான ஒழுங்கு விதிகள்

1. இலங்கையில் வெளியாகும் பத்திரிகையொன்றில் அல்லது சஞ்சிகையில் வெளியாகிய செய்தி.்.கட்டுரை புகைப்படம் அல்லது வேறும் வடிவமைப்பு மூலம் நபரொருவருக்கு பாதிப்பு, களங்கம் அல்லது அநீதி ஏற்பட்டிருப்பதாக நம்ப அல்லது நியாயமான ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியுமாயின் அதுபற்றி பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு (இ.ப.மு.ஆ.கு) முறைப்பாடு செய்ய முடியும். முறைப்பாடுகளின் தன்மைக்கு ஏற்ப மூன்றாம் தரப்பினரால் செய்யப்படுகின்ற முறைப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. அவ்வாரான முறைப்பாடொன்றை செய்பவர் தனிப்பட்ட முறையில் பதிவுத்தபால், மின்னஞ்சல், தொலைநகல், தொலைபேசி அல்லது வேறும் தொடர்பு கொள்ளக்கூடிய வழிமுறை மூலம், முறைப்பாடு செய்பவர் அவரின் கையொப்பத்துடன் முறைப்பாடு செய்ய முடியும். அவ்வாறான முறைப்பாட்டை அதற்குரிய விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பி வைப்பதாயின் மிகவும் பொருத்தமானதாகும்.

3. முறைப்பாட்டாளருக்கு பாதிப்பை அல்லது களங்கம் உண்டுபண்ணியதாக கருதும் பிரசுரத்தின் பிரதியையும் இணைத்து அனுப்ப வேண்டும்.இலத்திரனியல் அஞ்சல் அல்லது வேறும் இலத்திரனியல் வழிகளின் ஊடாக முறைப்பாடு செய்வதாயின் ஏழு அலுவலக நாட்களுக்குள் அதற்குரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி கையொப்பத்துடன் குறித்த பிரசுரத்தின் பிரதியோடு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

4. பிரதம நிறைவேற்று அதிகாரி (பி.நி.அ.) ஆணைக்குழுவாலும் பத்திரிகை நிறுவகத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட,பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தின் தொழில்சார் நடைமுறைக்கோவையின் எந்தப் பிரிவு அல்லது பிரிவுகளை குறித்த முறைப்பாட்டுக்கு காரணமான பிரசுரம் மீறியிருக்கின்றது என்பதை ஆராய்ந்து அவ்வாறான மீறல் இடம் பெற்றிருப்பின் மட்டுமே அம்முறைப்பாட்டை விசாரணை செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுப்பார்.

5. எந்தவொரு பிரசுரம் தொடர்பான முறைப்பாடும் அந்த பிரசுரம் வெளியாகிய திகதியில் இருந்து இரண்டு வருடங்கள் கடந்திருந்தால் அவ்வாறான முறைப்பாட்டை பி.நி.அ. பரிசீலணைக்கு எடுக்க மாட்டார்.

6. முறைப்பாட்டை விசாரணை செய்வதற்கு தீர்மானித்து ஒருநாளைக்காவது முன்னதாக பி.நி.அ. முறைப்பாட்டாளருக்கும் அதே கடிதத்தின் பிரதியொன்றை குறித்த பத்திரிகை அல்லது சஞ்சிகையின் ஆசிரியருக்கும் அனுப்பி அது தொடர்பாக மூன்று அலுவலக நாடகளுக்குக் குறையாத காலப்பகுதிக்குள் பதில் ஒன்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் குறித்த பத்திரிகை அல்லது சஞ்சிகை அல்லது வெளியீட்டின் ஆசிரியர் பி.நி.அ.க்கு பதில் ஒன்றை அனுப்பத் தவறிவிட்டால் அதன் பெறுபேறாக அமைவது குறித்த முறைப்பாடு இ.ப.மு.ஆ.கு. வின் விசாரணைப்பேரவையின் விசாரணைக்காக சமர்ப்பிப்பதாக அமையும். எவ்வாறாயினும் ஆசிரியரால் அல்லது அவருக்கு பதிலாக கருமமாற்றக்கூடிய ஒருவரால் மேலும் கால அவகாசம் கோரி நியாயமான வேண்டுகோள் ஒன்றை விடுத்தால் அதனை பரிசீலனை செய்து மேலதிக காலத்தை வழங்க பி.நி.அ. நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8. அவ்வாறு முறைப்பாடொன்று கிடைக்கப் பெற்று மிகவும் குறுகிய காலப்பகுதிக்குள் அதாவது விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இருவாரங்கள் கடக்க முன்னர் பி.நி.அ. சமாதானப்படுத்தல் மற்றும்.்.அல்லது இணக்கப்பாடு மூலம் இருதரப்பினரையும் நல்லிணக்கத்திற்கு கொண்டுவர சகல முயற்சிகளையும் எடுக்க வேண்டும். திருதிதம் செய்தல்,திருதிதத்துடன்.்.அல்லது மன்னிப்புக் கோரலுடன் ∴அல்லது பதிலளிக்க சந்தர்ப்பம் வழங்கல் அல்லது அதற்கு சமமான இணக்கப்பாட்டுக் குட்பட்ட தாகும். ஏவ்வாறாயினும் இத்தகைய இணக்கப்பாடொன்றுக்கும் முறைப்பாட்டு விசாரணைப் பேரவையின் அங்கத்தவர் ஒருவரின் சேவையைப் பெற்றுக்கொள்ள பி.நி.அ. நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9. ஆணைக்குழு முன்னிலையில் முறைப்பாடொன்றுடன் தொடர்புபட்ட உடன்படும் க்கப்பாட்டுடன் தொடர்புடைய பத்திரிகை அல்லது சஞ்சிகை மன்னிப்புக்கோரல் மற்றும் அல்லது வருத்தத்தை வெளிப்படுத்தல் மற்றும் அல்லது பதிலை பிரசுரிக்கும் போது அந்த பிரசுரத்தை செய்வது ஆணைக்குழுவின் முன்னிலையில் எற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் என்பதை குறிப்பிட்ட பத்திரிகை அல்லது சஞ்சிகை விஷேடமாக குறிப்பிட வேண்டும்.

10. சமாதானப்படுத்தல் மற்றும், அல்லது இணக்கப்பாட்டின் மூலம் தீர்வொன்றுக்கு வரமுடியாமல் போய் விட்டால் அவ்வாறு முடியாமல் போன திகதியில் இருந்து இருவாரங்களுக்குள் முறைப்பாட்டு விசாரணைப் பேரவை (சபை) அந்த முறைப்பாட்டை விசாரணைக்கு எடுக்கும்.

11. அவ்வாறே கிடைக்கும் முறைப்பாடொன்றை விசாரணை செய்வதன் மூலம் பொதுமக்கள் நலன் அல்லது பத்திரிகைத் தொழில்துறையின் நலன் அல்லது முறைப்பாட்டை செய்பவரின் நலன் மேலிடும் அல்லது அவ்வாறான நலனில் செல்வாக்குச் செலுத்தும் என்று பி.நி.அ. கருதுமிடத்தும் அவர் அந்த முறைப்பாட்டை நேரடியாக முறைப்பாட்டு விசாரணைப் பேரவைக்கு சமர்ப்பிப்பார்.

12. முறைப்பாடொன்று தொடர்பாக விசாரணைப் பேரவையின் தீர்ப்பு தொடர்பாக தரப்பினர் உடன்பாட்டை தெரிவிக்க வேண்டும்.

13. எப்போதும் விசாரணை யொன்றின்போது கோரம் பத்திரிகை மற்றும் பத்திரிகை சாராத அங்கத்தவர்களின் பெரும்பான்மையுடன் மூன்றாக இருக்க வேண்டும்.

14. முறைப்பாட்டு விசாரணைக் கவுன்சிலின் உறுப்பினர் ஒருவருக்கு குறித்த விடயம் தொடர்பாக தனிப்பட்ட முறையில் விஷேட ஆர்வம் இருக்குமாயின் அவ்விடயம் தொடர்பான விசாரணையின் போது அவர் அதற்கு சமூகமளிப்பதில் இருந்து தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

## <u>சாட்சியம்</u>

15. மத்தியஸ்த தீர்ப்பின் போது தரப்பினர் நிரூபிப்பதற்கு எதிர்பார்க்கின்ற விடயத்தை குறிப்பிட்டு அதற்கான ஆதாரங்களையும் முன்வைக்க வேண்டும்.

16. மத்தியஸ்த விசாரணைக் குழுவினரின் வேண்டுதலுக்கிணங்க முறைப்பாடு செய்யும் அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினர் தங்களிடம் உள்ள தொகுக்கப்பட்ட சாட்சியங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

17. மத்தியஸ்த குழுவினர் தேவைப்படும் என்று கருதும் போது தரப்பினரை சத்தியக்கடதாசியொன்றை சமர்ப்பிக்குமாறு கோர முடியும்.

18. ஏதாவதொரு விடயம் தொடர்பாக அதனை நிரூபிப்பதற்கு இலகு வழிகள் இருக்கையில் அவற்றை நாடாமல் முன்வைக்கப்படும் சாட்சியங்கள் பொருத்தமற்றவை அல்லது சம்பந்தம் இல்லாதவை என்று மத்தியஸ்த விசாரணைக்குழுவினர் கருதுமிடத்து அவற்றை நிராகரிக்க முடியும்.

19. முரண்பாடு தொடர்பாக தரப்பினரால் முன்வைக்கப்படுகின்ற சகல விடயங்களும் அல்லது சமர்ப்பணங்களும் இ.ப.மு.ஆ.கு. வின் ஒழுங்குவிதிகளுக்கமைவாக இருக்க வேண்டும். தரப்பினர் இத்தேவையை திருப்திப்படுத்த தவருமிடத்து மத்தியஸ்தர்கள் முறைப்பாட்டை நிராகரிக்க முடியும். இருந்தபோதும் அதனால் மத்தியஸ்த செயல்பாட்டுக்கு இடையூறு ஏற்படாது.

20. குறிப்பிட்ட முக்கியத்துவம் வாய்ந்த விடயம் ஒன்று தொடர்பாக அவ்விடயத்தோடு ஆளமான அறிவுபெற்ற ஒருவரின் கருத்தை அறிவதற்கு தரப்பினர் விரும்புவார்களாயின் மத்தியஸ்தர்களுக்கு அப்படியான ஒருவரின் சேவையைப் பெற முடியும்.

21. தரப்பினர் விசாரணையொன்றுக்கு சமூகமளிக்கத் தவறின் அல்லது உத்தரவிற்கு சாதகமான நிலையை தெரிவிக்காமை மற்றும் அதற்கு ஏற்றுக்கொள்ளத் தக்க காரணங்களை முன்வைக்காமை என்பன போன்ற விடயங்கள் விசாரணைகள் தொடர்வதற்கு இடையூறாக அமையாது.

## நிவாரணம்

22. தரப்பினரால் வேறொரு தீர்வை அல்லது நிவாரணத்தை பெற்றுத்தருமாறு மத்தியஸ்த பேரவைக்கு எழுத்து மூலம் வேணடுகோள் விடுக்கப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் குறிப்பிட்ட முறைப்பாடு தொடர்பாக மத்தியஸ்த செயல்பாட்டின் போது மத்தியஸ்தருக்குள்ள அதிகாரம் முறைப்பாட்டுடன் சம்பந்தமான பிரசுரத்திற்கு பதிலளிக்கும் வகையில் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் அல்லது திருத்தம் பிரசுரிக்க அல்லது வருத்தத்தை வெளிப்படுத்த சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுத்தல் என்பவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக அமைய வேண்டும்.

23. மத்தியஸ்த பேரவையால் விஷேடமாக குறிப்பிடப்படாவிட்டால் முறைப்பாட்டை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த திகதியில் இருந்து ஒருமாத காலப்பகுதிக்குள் தீர்ப்பை அறிவிக்க முடியும்.

24. தீர்வுக்கு இணக்கம் ஏற்பட்டால் அத்தீர்வானது முறைப்பாட்டாளர்களின் விருப்பத்தின் பேரில் ஏற்பட்ட மத்தியஸ்த தீர்வு என்பதை பேரவையால் அதன் தீர்ப்பில் உறுதி செய்ய வேண்டும்.

25. விசாரணையின் போது முறைப்பாட்டுடன் தொடர்புடைய எல்லா விடயங்களும் நல்ல முறையில் பரிசீலணைக்குட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட விடயங்களின் அடிப்படையிலே தீர்ப்பு வழங்கப்படும்.

26. மத்தியஸ்த பேரவையாக முழுமையான விசாரணைக்குழுவும் கூடிய சந்தர்ப்பங்களின் போது பெரும்பான்மை விருப்பத்தின் அபிப்பிராயத்திற்கமைய தீர்ப்பு அறிவிக்கப்படும்.

27. முரண்பாட்டுடன் தொடர்புடைய தரப்பினரிடையே விசாரணையின் ஏதாவது ஒரு பகுதி அல்லது வேறுபடுத்திக் கொள்ளப்பட்ட ஒரு விடயம் குறித்து அல்லது ஒரு தரப்பினரின் வேண்டுகோளின் படிஇன்னுமொரு முடிவு அல்லது நிவாரண வழியில் தீர்மானம் ஒன்றை எடுக்க முடியும்.அவ்வாறே ஒரு தரப்பினர் தீர்வை.்.நிவாரணத்தை நிராகரித்து எதிர்ப்பு தெரிவித்தால் விதி விலக்கான விடயங்கள் தொடர்பாக மத்தியஸ்த பேரவைக்கு அவ்வாறு கருமமாற்ற முடியும்.

28. முறைப்பாடொன்று தொடர்பில் ஏதாவது ஒரு தரப்பினர் ஒரு பகுதியின் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் அது தொடர்பாக வேறான தீர்ப்பை தெளியிட மத்தியஸ்த பேரவைக்கு முடியும்.

29. மத்தியஸ்தம் நடைபெற்ற இடத்திலேயே தீர்ப்பை அறிவிக்க முடியும். அந்த தீர்ப்புக்கு அல்லது அறிவித்தலுக்குரிய சகல விடயங்களும் உள்ளடங்க வேண்டியதோடு தேவைக்கேற்ப மத்தியஸ்தர் அல்லது மத்தியஸதர்கள் கையொப்பம் இட வேண்டும். மத்தியஸதர் ஒருவர் பெரும்பான்மையினரின் கையொப்பம் இல்லாமலும் கூட முடிவெடுப்பதற்கு பங்காளியாகியபடிக்கு உறுதியளித்து தீர்ப்பொன்றை அறிவிக்க முடியும்.

30. விசாரணையொன்றின் முடிவில் மத்தியஸ்தர்களின் தீர்ப்பின் பிரதியொன்றும் விசாரணை அறிக்கையின் பிரதியொன்றும் இ.ப.மு.ஆ.கு.வுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

## திருத்தம் அல்லது தீர்ப்பை மாற்றம் செய்தல்

31. தீர்ப்பொன்றின் போது தவறுகள் நடந்திருப்பதாக கருதுமிடத்து அல்லது ஆவண பரிசோதனைகளின் போது தெரிய வந்தால் தீருத்தங்களுடன் தீர்ப்பில் மாற்றம் செய்யவும் மத்தியஸ்த பேரவைக்கு முடியும்.

32. தீர்ப்பொன்றை வழங்கி முப்பது நாட்களுக்குள் அந்த தீர்ப்பு தொடர்பாக தீர்மானிக்கப்பட வேண்டியிருந்து அவ்வாறு தீர்மானிக்காத விடயம் தொடர்பாக ஒரு தரப்பினர் வேண்டுகோள் ஒன்றை விடுத்தால் அது தொடர்பாக தீர்மானம் எடுக்க கவுன்சிலுக்கு முடியும்.

33. தீர்ப்பொன்று வழங்கப்பட்டு முப்பது நாட்களுக்குள் ஒருதரப்பினர் வேண்டுகோள் விடுத்தால் அது தொடர்பாக விளக்கமளிக்க அல்லது தெளிவுபடுத்த மத்தியஸ்த கவுன்சிலுக்கு முடியும்.

34. இறுதித் தீர்ப்புக்கு வருமுன்னர் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அவர்களது கருத்துக்களை வெளியிட சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

## தீர்ப்பை அமுல்படுத்தல்

35. ஏதாவதொரு விடயத்தில் உடன்பாட்டுடன் அல்லது மத்தியஸ்தத்துடனான தீர்வுக்கு உடன்பட்டு மத்தியஸ்தத்தில் அல்லது விசாரணையின் போது அவ்வாறு உடன்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க தவறுமிடத்து முறைப்பாட்டாளருக்கு அந்த மத்தியஸ்தத்தை அமுலுக்கு கொண்டு வருவது தொடர்பாக 1995 ஆம் ஆண்டின் இணக்க சபை சட்டத்திற்கமைவாக மேல் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்ய பேரவை ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

36. 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மத்தியஸ்த சட்டத்திற்கமைய நிவாரணத்தின்படி மேல் நீதிமன்றத்தில் செய்யப்படும் முறைப்பாட்டுக்கு 14 நாட்கள் கடந்த பின்னர் வரும் ஒருவருட காலப்பகுதிக்குள் வழங்கப்படும் தீர்ப்பை அது காலாவதியாவதற்கு முன்னதாக அமைய வேண்டும்.

37. ஆணைக்குழுவின் முறைப்பாட்டு விசாரணைப் பேரவையின் எந்தவொரு தீர்ப்பும் அறிவிக்கப்பட்ட பின்னர் குறிப்பிட்ட பத்திரிகையில் அல்லது சஞ்சிகையில் தாமதிக்காமல் அவசரமாக பிரசுரிக்க வேண்டும்.

38 இ.ப.மு.ஆ. பேரவையின் அத்தகைய நியாயத்தீர்ப்பு 1995ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க சட்டத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட நடுத்தீர்ப்பு நியாய சபையொன்றினால் வழங்கப்படும் அளிப்பொன்றிற்குச் சமமானதாதல் வேண்டும் என்பதுடன் சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய நியாயத்தீர்ப்பின் வலுவுக்கிடலுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

39. பி.நி.அ. வின் ஏதேனும முடிவு அத்துடன் அல்லது இ.ப.மு.ஆ. பேரவையின் நியாயத்தீர்ப்பு எல்லா நோக்கங்களுக்காகவும் இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்: அதனை நீதிமன்றதின் முன்னிலையில் ஆட்சேபிக்க முடியாது.

40 பி.நி.அ. எல்லா முறைப்பாடுகளினதும் இணக்கம், மத்தியஸ்தம், நடுத்தீர்ப்பு நடவடிக்கைகள் என்பவற்றின் முடிவுகளினதும் பதிவொன்றைப் பேணுதல் வேண்டும் என்பதுடன் அதன்பின்னர் ஆணைக்குழுவின் ஒரு வெளியீடு என்ற வகையில் பொது மக்களுக்குக் கிடைக்கவிருக்கும் ஆண்டு அறிக்கையை ஆணைக் குழுவுக்குக் கிடைக்கச் செய்வித்தலும் வேண்டும்.

41 இந்த நடவடிக்கைமுறை 2003 அக்டோபர் 15ஆம் திகதி அல்லது அதன்பின்னர் வெளியிடப்பட்ட செய்தித் தாள் ஒன்றில் அல்லது சஞ்சிகையொன்றில் காணப்படும் பிரசுரிக்கப்பட்ட விடயமொன்றிற்கு எதிரான முறைப்பாட்டிற்குப் பயனுறுதியுடைய தாயிருக்கும். இலங்கைப் பத்திரிகை நிறுவகத்தால் ஏற்றங்கீகரிக்கப்பட்டவாறு இலங்கைப் பத்திரிகையாசிரியர்களின் ஒன்றியத்தின் உயர்தொழில்சார் நடைமுறை க்கோவை

**இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் கண்காணிக்கப்படுகின்ற இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் ஒழுக்கக் கோவை**

42.இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தாலும் இ.ப.மு.ஆ. வினாலும் ஏற்று அங்கீகரிக்கப்பட்டவாறு இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்களின் ஒன்றியத்தின் உயர் தொழில்சார் நடைமுறைக்கோவையின் பொருள்கோடல் இந்த விதிகளின்கீழ் எல்லா ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் நோக்கத்திற்கு பேரவைக்கே உரித்தானதாயி ருத்தல் வேண்டும்.

**இ.ப.மு.ஆ. வின் பேச்சாளர்**

43. ஆணைக்குழுவின் *கொள்கை சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களுக்குமான* பேச்சாளர் இ.ப.மு.ஆ. வின் தவிசாளர் அல்லது சபையின் சார்பில் உரையாற்றுவதற்கு சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் ஆதல் வேண்டும்.

44. பிரதம நிறைவேற்று அலுவலரே (பி.நி.அ.) பேரவையால் பெறப்பட்ட எல்லா முறைப்பாடுகளுக்கும் அத்துடன் செய்யப்பட்ட முடிவுகளுக்கும் பேச்சாளராக இருப்பார். ஆயின் எவ்வாறாயினும் அவ்வாறு செய்வது அறிவுடைமையாகுமிடத்து பி.நி.அ. பேரவையின் தவிசாளரைக் கலந்தாலோசிக்கலாம். எனினும் எது விடயத்திலும் நடைபெற்றுவரும் விசாரணைகள் பற்றி பத்திரிகைக்கு அத்துடன் அல்லது இலத்திரனியல் ஊடகத்திற்கு அத்துடன் அல்லது பொதுமக்களுக்கு விவரங்கள் வழங்கப்படுதலாகாது. அத்துடன் பேரவையால் செய்யப்பட்ட எவையேனும் நியாயசபை அளிப்புகள் பற்றிய பொருள்கோடல் எதுவும் பேரவையின் தவிசாளருடான அத்துடன் அல்லது நடுத்தீர்ப்புக் குழாமுடனான கலந்தாலோசனையின் பின்னரே பி.நி.அ. ஆல் செய்யப்படுதல் வேண்டும்.

45. இ.ப.மு.ஆ. வின் பணி தொடர்பில் கட்டுரையொன்றைக் கொடுத்துதவ அல்லது இலத்திரனியல் ஊடகத்தில் ஏதேனும் ஊடக உரையாடலின் ஓர் அங்கமாக இருக்க விரும்பும் இ.ப.மு.ஆ. உறுப்பினர் எவரும் பி.நி.அ. இன் முன்னங்கீகாரத்தை எழுத்திலாயின் பெறுவது விரும்பத்தக்கது, பெறுதல் வேண்டும். ஆனால் எது விடயத்திலும் கொள்கை சம்பந்தமான எவையேனும் கருமங்கள் பற்றி உரையாடுவதிலிருந்து அத்தகைய அலுவலர் புறநீக்கம் செய்யப்படுகின்றார். இது பணிப்பாளர் சபையின் சிறப்புரிமையாகும்.

46. எல்லாப் பத்திரிகை அறிக்கைகளுக்கும் இப.மு.ஆ. தவிசாளரின் முன்ன அனுமதி தேவைப்படும். அவை முறைப்பாடு சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பிலானதாக இருப்பின் அதற்குப் பேரவையின் தவிசாளருடைய அதிகாரமளிப்பு தேவைப்படும்.

47. இந்த ஒழுங்கு விதிகள் பிரதம நிறைவேற்று அதிகாரியால் வருடாந்தம் அல்லது தேவைப்படும் போது திருத்தம் செய்யப்பட்டு முரண்பாட்டுத் தீர்வுக்குழு அங்கத்தவர்களின் அங்கீகாரத்திற்காக ஒப்படைகக்ப்பட்டு இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அமுல்படுத்தலுக்காக சமர்ப்பிக்கப்படும்.